காலஞ் சென்ற வழக்கறிஞர்

## திரு. த. மயில்வாகனம் அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

**திரு. எம். சிவநேசராசா, B. A. (இலங்கை)**
*அதிபர்*
*மட்/கோட்டைமுனை மகா வித்தியாலயம்*

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது பொதுப்பணிகளினுல் அருந் தொண்டாற்றிய திரு. த. மயில்வாகனம், வழக்கறிஞர் திரு. தரும லிங்கம் அவர்களுக்கும் வே. கனகம்மா அவர்களுக்கும் மகளுக 19-12-1918ல் பிறந்தார். தாய் வழியிலும், தந்தை வழியிலும் கல்வி அறிவு மிக்க குடும்பத்தில் பிறந்த அவர், சென்ற் அன்றூஸ் கல்லூரி, வின் சென்ற் மகளிர் கல்லூரி, மட்டக்களப்பு மத்திய கல்லூரி என்பவற்றில் தமது ஆரம்பக் கல்வியைப் பெற்ருர். பின்னர் யாழ்ப்பாணம் ஹாட்லி கல்லூரியிலே சேர்ந்து கனிஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திர வகுப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சியுற்ருர். சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பில் தேர்ச்சி பெற்று, கொழும்பு சென்ற் ஜோசேப் கல் லூரியிற் பயின்று, இலங்கைச் சர்வகலாசாலைக் கல்லூரியிற் சேர்ந்தார்.

சர்வகலாசாலைக் கல்லூரியில் முதலாண்டுப் பரீட்சையிற் சித்தி யெய்தி கீழைத்தேச வரலாற்றில் மூன்ருண்டுகள் பயின்று 1940ல் சிறப்புக் கலைத்தேர்வில் இரண்டாம் பிரிவில் தேர்ச்சியுற்ருர். சர்வ கலாசாலையில் பயின்ற காலத்திலேயே பொதுப்பணியில் பெரும் ஆர்வம் காட்டினுர். இதன் பயனுகப் பல்கலைக்கழகக் கல்லூரியின் யூனியன் சங்கச் செயலாளராகத் தெரியப்பட்டு, 1938 – 39 வரை அப்பதவியை வகித்தார்.

இதனைத் தொடர்ந்து சட்டக் கல்லூரியில் 1940 ஆகஸ்டு மாதத்தில் சேர்ந்து வழக்கறிஞராகத் தேர்ச்சிபெற்ருர். சாட்சியம் பற் றிய சட்டத்துறையில் (Law of Evidence) பரிசும் பெற்ருர்.

வழக்கறிஞராக வெளிவந்த திரு. மயில்வாகனம், மட்டக்களப்பு மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியாக 1944ஆம் ஆண்டு மே மாதம் நியமிக்கப்பட்டார். இன்றைய மட்டக்களப்பு அம்பாரை மாவட்டங்களை அன்றைய மட்டக்களப்பு மாவட்டம் உள்ளடக்கியிருந் தது. இக்காலத்தில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றிற்கு எடுத்துக்காட்டாக விளங்கினுர். அவரது நிர்வாகத்தில் அரிசி, சீனி என்பவற்றிற்கு அனுமதிப்பத்திரம் கேட்டுச் சென்ற ஒரு பிள்ளைகூட

இலகுவாக அனுமதிச்சீட்டு பெறக்கூடியதாகவிருந்தது நாடறிந்த உண்மை. ஆங்கில ஆட்சியில் அதிகாரவர்க்கத்தினர் பெரும் படாடோபத்துடன் வாழ்ந்த காலத்தில் திரு. மயில்வாகனம்,

> ''காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல்
> மீக்கூறும் மன்னன் நிலம்''

என்னும் குறளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார். திரு. மயில்வாகனம் உணவுக் கட்டுப்பாட்டதிகாரியாக இருந்த காரணத்தால் உணவுத் தட்டுப்பாடு நிலவிய யுத்த காலத்தில் மட்டக்களப்பு மக்கள் உணவுத் தட்டுப்பாடெதுவுமின்றி மகிழ்ச்சியாக வாழ வழியேற்பட்டது. தமது திணைக்களத்தில் பெருந்தொகையானவர்களுக்கு வேலை வாய்ப்பையும் அளித்தார். இதனால், 'ஏ. எஸ். சி. மயில்வாகனம்' என்ற பெயர் அவருக்கு ஏற்பட்டுவிட்டது.

உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி பதவியை விட்டு விலகிய திரு. மயில்வாகனம் வழக்கறிஞராகச் சத்தியப்பிரமாணஞ்செய்து கொண்டார். அது முதல் வழக்கறிஞர் தொழிலைத் தமது தொழிலாகக் கொண்டார்.

வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்ட திரு. மயில்வாகனம் செல்வி இலெட்சுமிப்பிள்ளை சீனிவாசகம் என்னும் ஆசிரியையை மணந்து இல்லற வாழ்வை ஆரம்பித்தார். மனமொத்த இத்தம்பதிகளின் வாழ்க்கை செம்மையாக நடைபெற்றது. அவர்கள் ஐந்து புதல்வர்களைப் பெற்றார்கள். அவர்களின் மூத்தமகன் இலங்கைப் பல்கலைக் கழகக் கட்டுப்பெத்த வளாகத்தில் பொறியியல் பயின்று வருகிறார்.

திரு. மயில்வாகனம் வழக்கறிஞரானபோதும் பொதுமக்களை மறந்தாரில்லை. பொதுமக்களின் நன்மைக்காகத் தமது ஓய்வு நேரம் முழுவதையும் உபயோகித்தார். தமது உதவியை நாடிவந்த அனைவருக்கும் தம்மாலான உதவிகளைப் புரிந்தார். 1957ல் பெருவெள்ளத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பேரழிவு ஏற்பட்டபோது ஏழைகளின் துயர்துடைக்க முன்வந்தார். லங்கா சமசமாஜக் கட்சி வழங்கிய உணவுகளையும், உடைகளையும் பொதுமக்களுக்குப் பங்கிட்டளிப்பதற்கு வேண்டிய உதவிகளைப் புரிவதில் மகிழ்ச்சியோடு ஈடுபட்டார். அவ்வெள்ளத்தால் உடைந்துபோன உன்னிச்சைக் குளத்தைப் புனரமைப்புச் செய்வதற்காக நிறுவப்பட்ட உன்னிச்சை விவசாயிகள் சங்கத்தின் தலைமைப் பதவியை ஏற்று உன்னிச்சைக் குளத்தை விரைவாகக் கட்டிமுடிக்க வழிகோலினார்.

இதனைத் தொடர்ந்து சமசமாஜக் கட்சியுடன் தொடர்புகொண்ட அவர், மட்டக்களப்பு சமசமாஜ வாலிப சங்கத் தலைமைப் பதவியை ஏற்றுத் திறம்பட வகித்தார். இக் காலத்திலேதான் மயில்வாகனம் தலைமையில் இயங்கிய சமசமாஜ வாலிபர் சங்கம் தலைகொடபிட்டிய தொகுதி நிர்ணயக் கமிசன் முன்னளித்த சாட்சியத்தின் பயனாக மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியாகப் பிரிக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் பஸ், புகையிரத, பெற்றோலியத் தொழிலாளர்

சங்கங்களை அமைத்து, தொழிலாளர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தளராது உழைத்தார். மட்டக்களப்பு இலங்கைப் போக்குவரத்துச்சபை டிப்போவில் முதல் வேலைநிறுத்தத்தை ஆரம் பித்து பஸ் தொழிலாளரது குறைகளை வென்றுகொடுத்தார். இக் காலத்தில் ஐக்கிய மோட்டார்த் தொழிலாளர் சங்க மட்டக்களப்புக் கிளையின் தலைமைப் பதவியைத் திரு. மயில்வாகனம் வகித்தார்.

இங்ஙனம் அரசியல், தொழிற்சங்க இயக்கங்களில் ஈடுபட் டுழைத்த திரு. மயில்வாகனம் 1960ல் நடந்த பாராளுமன்றத் தேர் தலில் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிட்டார். இத்தேர்தலில் வெற்றிகிட்டாதபோதும் தமது சமூகப்பணியைத் தொடர்ந்து மேற் கொண்டார். அவர் என்றும் வகுப்புவாத அரசியலில் ஈடுபடவில்லை.

கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பணி மதிப் பிட முடியாததாகும். மண்முனை மாணுவாரி உற்பத்தி விற்பனவுக் கூட் டுறவுச் சங்கத் தலைவராகவிருந்து அச்சங்க வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். எப்போதும் இலாபத்தில் இயங்கிய இச்சங்கம் கூட்டுறவு இயக்கம் புனரமைப்புச் செய்யப்பட்டபோது பல்லாயிரக்கணக்கான ரூபாய் பெறுமதியான ஆதனங்களையும், பணத்தையும் கொண்டிருந் தது. கூட்டுறவு இயக்கம் புனரமைப்புச் செய்யப்பட்டபோது மட்டக் களப்பு ப. நோ. கூ. சங்கத்தின் முதற் தலைவராக நியமிக்கப்பட் டார். அவரது தலைமையில் இயங்கி இச்சங்கம் சிறந்த சேவையைச் செய்ததுடன் பெரும் இலாபத்தையும் ஈட்டியது. இலங்கை தேசிய கூட்டுறவுச் சமாஜ மட்டக்களப்பு மாவட்டக் கிளையின் தலைவராகவும் பணிபுரிந்துள்ளார்.

இங்ஙனம் மட்டக்களப்பு மாவட்டத்தின் வளர்ச்சிக்குழைத்த அவர் மட்டக்களப்பு மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதி யாக மக்கள் வங்கிப் பணிப்பாளர்களில் ஒருவராக 1965ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டார். அப்போது மக்கள் வங்கியின் தலைவராகவிருந்த திரு. T. B. பணபொக்க அவர்களின் தலைமையில் இலங்கை முழுவ திற்கும் நற்பணியாற்றினர். அவரது ஆலோசனைகள் மக்கள் வங்கிக் காரிய முகாமைச் சபையால் பெரிதும் வரவேற்கப்பட்டன.

திரு. மயில்வாகனத்துக்கு இளமையிலேயே தமது தந்தையாரின் தென்னந்தோட்டங்களைப் பரிபாலிக்கவேண்டிய பொறுப்பு ஏற்பட்டது. அப்போது தொடக்கம் விவசாயத்திலீடுபாடு அவருக்கு ஏற்படலாயிற்று. பின்னர் அரசாங்கத்திடம் பெற்ற நிலத்தைத் திருத்தி சிறந்த வயலை அமைத்துக்கொண்டார். கல்லடியில் மணல் வெளியில் அமைக்கப்பட்ட அவரது இல்லத்தின் முன்றிலில் அழகிய பூங்காவையும், பின்பக்கம் சிறந்த காய்கறித் தோட்டத்தையும் அமைத்துப் பாலைவனத்தைச் சோலைவனமாக மாற்றினர். அவருக்கு விவசாயத் துறையிலிருந்த ஈடு பாடு காரணமாக மாவட்ட விவசாயக்குழு உறுப்பினராக நியமிக்கப் பட்டார். அக்குழு உறுப்பினராக இருந்தபோது மட்டக்களப்பின் விவ சாய வளர்ச்சிக்கான நல்லாலோசனைகளைக் கூறிவந்தார்.

றோட்டரிக்கழகத்தின் உறுப்பினராகச் சேர்ந்து கழகம் மேற்கொண்ட பணிகளனைத்திலும் ஈடுபட்டுழைத்தார். றோட்டரிக் கழகத்தினருடன் தென்னிந்திய சுற்றுலாவை மேற்கொண்டபோது அங்குள்ள கல்லூரி மாணவர்களுக்கு அரிய சொற்பொழிவுகள் மூலம் இலங்கையின் சிறப்புகளை எடுத்துரைத்தார்.

அயராத உழைப்பும் தளராத சேவையும் ஆற்றிவந்த மயில்வாகனம் இயற்கை வைத்தியத்தில் நம்பிக்கையுள்ளவர். இதனால் அடிக்கடி வைத்தியர்களை நாடும் வழக்கம் அவரிடமிருக்கவில்லை. அவரையறியாமல் அவரிடம் வளர்ந்த இதயநோய் காரணமாக 1974ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ந் திகதி மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட செய்தி அவரது நண்பர்களை எட்டமுன்பே அருமை மனைவியையும் மக்களையும், உறவினர்களையும், நண்பர்களையும் துன்பக்கடலில் ஆழ்த்தி இயற்கை எய்தினர். (இத்துயரத்தைப் பொறுக்கமுடியாது இயற்கை மூன்று நாள்கள் மழையாகக் கொட்டித்தீர்த்தது)

கடைசி மூச்சுவரை தனக்கும், பிறர்க்கும் பயனுள்ள வாழ்க்கை நடத்திய திரு. மயில்வாகனம் இன்னும் பல அருஞ்சாதனைகளைச் செய்யுமுன் இயற்கையெய்தியது மட்டக்களப்பிற்கோர் பேரிழப்பாகும்.

★ ★ ★